[1st March 1968

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : (அ) ஆம்.

(இ) மருத்துவ அதிகாரிகள் நீதிமன்றங்களிலிருந்து அவர்களுடைய வருகையைக்கோரும் நீதிமன்ற அழைப்புக்கட்டளையை (Summons) பெறும்போது அவர்கள் நீதிமன்றங்களுக்குச் செல்வதைத் தவிர்க்க முடியாது.

(உ) செங்கோட்டை அரசாங்க மருத்துவமனையில் ஒரு பெண் டாக்டரை நியமிப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. எம். எத்திராஜுலு : தலைவரவர்களே, டாக்டர்கள் நீதிமன்றங்களுக்கு விசாரணைக்குப் போகும்போது விசாரிக்காமல் திருப்பி அனுப்பப் படுகிறார்கள். அதன் காரணத்தால்தான் அவர்கள் ஆஸ்பத்திரி வேலைகளை கவனிப்பதில் தாமதம் ஏற்படுகிறது. அதைத் தவிர்க்க டாக்டர்கள் விசாரணைக்காக நீதிமன்றத்திற்கு வரும்போது அவர்களை உடனடியாக விசாரித்து அனுப்பிவிட வேண்டுமென்று நீதிமன்றத்திற்கு அரசாங்கம் ஏதாவது தெரியப்படுத்துமா?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : நீதிமன்றங்களில் விசாரணை நடப்பது அந்த வழக்கின் தன்மையைக் குறித்ததாகும். ஆகவே நீதிமன்றத்திற்கு கட்டளையிடுவது என்பது முறையானதல்ல.

MR. CHAIRMAN : Questions are overs The call attention notice under rule 42is postponed.

[N.B.—Asterisk (*) at the commencemant of a speech indicates revision by the Member.]

II.—POINT OF INFORMATION *re* -ANSWERS TO QUESTIONS ADDRESSED TO THE HON. THE CHIEF MINISTER.

திரு. கே. ராமதாஸ் : தலைவரவர்களே, முதலமைச்சர் அவர்களின் கேள்விகள் எல்லாம் அவர் உடல் நலமில்லாத காரணத்தால் தள்ளி வைக்கப்பட்டிருக்கின்றன. கல்வி அமைச்சர் அவர்களும் வரவில்லை. இதனால் பல கேள்விகள் மறந்து போகின்றன. ஆகவே மற்ற அமைச்சர்களாவது பதில் சொல்லும் வகையில் ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும்.

திரு. கே. பாலசுப்பிரமணிய அயர் : தலைவரவர்களே, இது மன்றத்திற்கு கஷ்டமாகும். உபகேள்விகள் போடும்போது, பதில் சொல்ல சிரமம் ஏற்படும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இன்று போடப்பட்டுள்ள முதலமைச்சர் கேள்விகளுக்கெல்லாம் நாளையதினம் கூடுமானவரை பதில் கொடுப்பதற்கு முயற்சி செய்கிறேன்.

III. GOVERNMENT MOTIONS.

(1) ELECTION OF NINE MEMBERS TO THE COMMITTEE OF PRIVILEGES.

The HON. THIRU M. KARUNANIDHI : Sir, I move—

That with reference to Rule 156 of the Madras Legislative Council Rules, this Council do proceed on a date to be fixed by the Hon. Chairman to elect nine Members to be Members of the Committee of Privileges for the financial year 1968–69.